VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter


If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி
## செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:3 இதழ்:4 ஜனவரி:2019 ரூ.10/– வருட சந்தா:ரூ.100/–
Volume:3 Issue:4 JAN:2019 Rs.10/- Annual Subs: Rs.100/-



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

*81/1, மன்னப்பன் தெரு,*
*கோட்டூர், சென்னை – 600 085.*

**போன்: 044 – 2447 4744**

## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

**நடத்தும்**

**ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பூஜை**
**மற்றும் பாராயணம்**

**நாள்:**
**20.01.2019, ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 4.00 மணி**

**இடம்:**
**மதுராந்தகம், சென்னை.**

**இவ்விழாவில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் பதிவு செய்து கொள்ள அணுக வேண்டிய தொலைபேசி எண்கள்**

**9444060346 / 94434 95950**

**நிகழ்ச்சிக்கு வரும்பொழுது மறவாமல் டோக்கன் கொண்டு வரவும்.**

---

**சென்னை, கோட்டூர்புரம் ஸ்ரீ மஹா மேரு மண்டலியில் தினசரி நடக்கும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்**

**94440 60346**




# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street, Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**





**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 4

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

இணை ஆசிரியர்
**டி.சூரியநாராயணன்**
உதவி ஆசிரியர்
**ஸ்ரீ ஸ்ரீகாந்தன்**
புத்தகக்குழு
**ஸ்ரீ டி.சூரியநாராயணன்**
**ஸ்ரீ ஸ்ரீகாந்தன்**
**ஸ்ரீ சௌந்தரராஜன்**
**ஸ்ரீ விஸ்வநாதன்**
**ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,**
**வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,**
**ஸ்ரீ ஸ்வாமிநாதன்,**
**நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,**
**ஸ்ரீ மணிசங்கர்**

நிர்வாக முகவரி:
ப்ளாட் நெ.B3/B4,
மேஃபேர் அப்பார்ட்மெண்ட்,
2A, LIC காலனி, வேளச்சேரி,
சென்னை - 600 042.
**Ph : 98841 05302**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு | 4 |
| அட்டைப்பட விளக்கம் | 6 |
| ஜனவரி மாத விசேஷங்கள் | 7 |
| பிரதக்ஷிணம் | 8 |
| ஸ்துதிகள் | 10 |
| வேதபாரதியின் எண்ணங்கள் | 11 |
| மஹா பெரியவா பேசுகிறார் | 12 |
| ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஆசீர்வாதம் | 14 |
| ஸ்ரீ மஹாமேரு மண்டலி கோட்டூர் | 17 |
| வேதபாரதி புதுவைகிளை நிகழ்வுகள் | 18 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 24 |
| தர்மத்தின் குரல் | 28 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.

சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டஸ்**
1, லட்சுமிநகர், 100 அடி சாலை, வேளச்சேரி, சென்னை - 42. செல்: 8939000064

## ஒரு நிமிடம் உங்களோடு!

மனதை எந்த அனுபவத்திலும் பிடித்து நிறுத்தக்கூடாது. அப்படி நிறுத்தினால் பிரச்சனைகள்தான் உண்டாகும். அதனால்தான் பகவான் கீதையில் 'ஒரு ஆமையைப்போல் வாழு' என்கிறார்.

யதா ஸம்ஹரத சாயம் கூர்மோங்கானீவ ஸர்வச:/
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ்தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா//
*(கீதை 2-58).*

ஆமை தன் அவயங்களை அடக்கிக்கொள்வது போல் பொருள்களிடத்திலிருந்து பொறிகளை முழுவதும் உள்ளிழுக்க வல்லவனுக்கு நிறை ஞானம் நிலைபெறுகிறது.

ஒன்றையே நினைத்து சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடாது. எண்ணங்களை மாற்றிக்கொண்டே இருக்கவேண்டும். நல்ல புத்தகங்களைப் படிக்கவேண்டும். நமக்குத் தெரிந்ததை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு சமயம் ஒரு குருவும் அவருடைய சிஷ்யரும் ஒரு ஊருக்குப் போகும் போது ஒரு ஆறு குறுக்கிட்டது. அவர்கள் அந்த ஆற்றைக் கடக்க முயற்சிக்கும் போது நடக்க முடியாத ஒரு பெண் வந்து அவர்களிடம் ஆற்றைக் கடக்க உதவி கேட்டாள். உடனே அந்த குரு அந்த பெண்ணைத் தன் தோளில் வைத்துக் கொண்டு ஆற்றைக் கடந்து இறக்கிவிட்டுவிட்டு போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த சிஷ்யன் தன் குருவிடம் 'குருவே நாம் பெண்களை மனதாலும் நினைக்கக்கூடாது. ஆனால் தாங்கள் அவளை தங்கள் தோளிலேயே தூக்கிவந்தீர்களே இது தவறு இல்லையா?" என்று கேட்டான். அதற்கு அந்த குரு ''நான் அவளை சுமந்துவந்து ஆற்றங்கரையிலேயே இறக்கிவிட்டு விட்டேன். ஆனால் நீ இன்னும் அவளை உன் மனதில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறாய்" என்றார்.

இது போல் நாமும், பிரச்சனைகள் உண்டாக்குவது நாம் அல்ல, நம்முடைய மனதுதான். பகவான் அர்ஜுனனிடம் "அர்ஜுனா நீ யுத்தம் செய், ஆனால் மனதை "மா அனுஸ்மரா" என்னிடம் செலுத்து" என்கிறார்.



கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன/
மா கர்மபலேஹதுர்பூர்மா தே ஸங்கோஸ்த்வ கர்மணி//
*(கீதை 2:47)*

வினையாற்றக் கடமைப்பட்டுள்ளாய், வினைப்பயனில் ஒருபொழுதும் உரிமை பாராட்டாதே வினைப்பயன் விளைவிப்பவன் ஆய்விடாதே, வெறுமனே இருப்பதில் விருப்புக்கொள்ளாதே.

நாம் ஒன்றை எதிர்பார்க்கலாம். ஆனால் அதுதான் கிடைக்கவேண்டும் என்று நாம் தீர்மானிக்கக்கூடாது, முடியாது என்று பிடிவாதத்துடன் இருக்கக்கூடாது. அதனால் கர்மம் செய்யாமலும் இருக்கக்கூடாது. அந்த கர்மம் செய்வதால் கிடைக்கவிருக்கும் பலனை எதிர்பார்க்கலாம். ஆனால் அந்த பலன் தான் நினைத்ததாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கக்கூடாது.

"படகு நீரில் இருக்கலாம், ஆனால் நீர் படகுக்கு நுழையலாகாது. மனிதன் உலகில் வாழலாம். ஆனால் உலக ஆசை அவன் உள்ளத்தில் புகுந்துவிடக்கூடாது." (ஸ்ரீ ராமகிருஷ்ணர்)

அதனால் கீழ்க்கண்ட நான்கு விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும்.

1. மனதை எப்போதும் (Engaged) சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும்.
2. எதிர்பார்க்கும் சுதந்திரம் இருந்தாலும் எதிர்பார்ப்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் சுதந்திரம் இல்லாததால் கிடைப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
3. இதுதான் கிடைக்க வேண்டும், மற்றவர்கள் இப்படித்தான் கூறவேண்டும், இதைத்தான் தரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தால் நம்மை நாமே தாழ்த்திக்கொள்வோம்.
4. மனதை சும்மா இருக்க அனுமதிக்கக்கூடாது.

**- டி. சூரியநாராயணன்**

## அட்டைப்பட விளக்கம்

பசு என்பது இந்துக்களால் தெய்வமாக பார்க்கப்படும் ஒரு ஜீவன். தெய்வ வழிபாடுகள் மனித வாழ்க்கைக்கு தெம்பூட்டுபவை. சோகமான நிலையில் இருக்கும் ஒருவரை யோகமானவராக மாற்றுவது தெய்வ வழிபாடுகள்தான். எந்த வழிபாடாக இருந்தாலும் குருவின் வழியாக அதை முறைப்படி செய்வது மிகுந்த பலனைத் தரும்.

ஒரு சிலருக்கு வழிபாடு மேற்கொண்ட உடனேயே பலன்கிடைத்து விடும். ஒரு சிலருக்கு அதன் பலன் தாமதமாகும். இதற்கு அவரவர் ஜாதக அமைப்பும் பூர்வ புண்ணிய பலனுமே காரணம். அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருக்காமல், தொடர்ந்து இறைவழிபாட்டை மேற்கொண்டு வந்தால் நிச்சயம் நற்பலனைப் பெறலாம்.

பசுவை ஆராதனை செய்து வழிபடுவோர்க்கு அனைத்து தெய்வங்களையும் வழிபட்ட பலனும் ஒருசேரகிடைக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஒருவர் எதை கேட்டாலும் அதை தரும் வல்லமை ‘காமதேனு’ என்ற இந்திரலோக பசுவிற்கு உள்ளது என்பது நாம் அறிந்ததே. அதே போல் இப்பூவுலகில் வாழும் பசுக்களை பூஜை செய்து வழிபடுவதன் மூலம் அளப்பரிய பல நல்ல பலன்களை பெற முடியும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தனையோ தோஷங்கள் இருக்கின்றன. மேலும் கிரக தோஷங்கள், பாவங்கள், சாபங்கள் அகல எளிய வழிபாடு கோ பூஜைதான். பசுவை தெய்வத்தின் அம்சமாக வழிபட வேண்டும். மஞ்சள், குங்குமம் வைத்து அதற்கு வஸ்திரம் சாத்தி மூன்று முறை வலம் வந்து தீப, தூபங்கள் காட்டி அதன் வால் பகுதியைத் தொட்டு வணங்க வேண்டும். பசுவின் உரிமையாளருக்கு உங்களால் முடிந்த தட்சணையை கொடுங்கள்.

பசு வசிக்கக்கூடிய கொட்டிலில் தியானம் செய்வதும், ஹோமம் செய்வதும் நல்லது. பசுவின் கோமியத்தை தீர்த்தமாக வீட்டிற்குத் தெளிப்பது வழக்கம். அதன் சாணம் கூட கிருமி நாசினியாகப் பயன்படுகிறது.



இந்த பூஜை செய்கையில் பசு தன் கன்றோடு இருத்தல் அவசியம். கோமாதா மந்திரம் (ஜபிக்கலாம்)

**“சர்வ காமதுகே தேவி சர்வ தீர்த்தாபிஷேசினி**
**பாவனே சுரபி சிரேஷ்டே தேவி துப்யம் நமோஸ்துதே”**

தொகுப்பு :
**ஆதனூரான்**

## ஜனவரி மாத விசேஷங்கள்

**(ஜனவரி 1/2019 முதல் ஜனவரி 31/2019 வரை)**

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 1 | செவ்வாய் | ஸ்மார்த்த ஏகாதசி விரதம் |
| 2 | புதன் | ஸ்ரீ மஹாபெரியவாளின் ஆராதனை |
| 3 | வியாழன் | பிரதோஷம் |
| 4 | வெள்ளி | சதுர்தசி சிவராத்திரி |
| 5 | சனி | அமாவாசை, ஹனுமத் ஜயந்தி |
| 7 | திங்கள் | சந்திர தரிசனம் |
| 8 | செவ்வாய் | சிரவண விரதம் |
| 10 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| 11 | வெள்ளி | கூடார வல்லி |
| 12 | சனி | விவேகானந்தர் ஜெயந்தி |
| 14 | திங்கள் | போகிப்பண்டிகை |
| 15 | செவ்வாய் | தைமாத பிறப்பு, பொங்கல் பண்டிகை உத்ராயண புண்யகாலம் மகரஜோதி தரிசனம் |
| 16 | புதன் | கனு, மாட்டுப் பொங்கல், திருவள்ளுவர் தினம் தை கிருத்திகை |
| 17 | வியாழன் | உழவர் திருநாள், ஏகாதசி விரதம் |
| 18 | வெள்ளி | காஞ்சி பெருமாள் தேர் |
| 19 | சனி | பிரதோஷம் |
| 20 | ஞாயிறு | சபரி மலை நடை அடைப்பு |
| 21 | திங்கள் | பௌர்ணமி, வடசாவித்ரி விரதம், தைப்பூசம் |
| 22 | செவ்வாய் | தைபூசம் |
| 23 | புதன் | சுபமுகூர்த்த நாள் |
| 25 | வெள்ளி | ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை |
| 26 | சனி | குடியரசு தினம், வாஸ்து நாள் |
| 27 | ஞாயிறு | சுபமுகூர்த்த நாள் |
| 30 | புதன் | காந்திஜி நினைவு நாள், சுப முகூர்த்த நாள் |
| 31 | வியாழன் | ஏகாதசி விரதம், கரி நாள் |

## பிரதக்ஷிணம்

நம்முடைய பாரததேசத்தின் அடையாளமே கோயில்கள்தான். அதிலும் தமிழகத்தின் அடையாளம். உயர்ந்த அழகிய கோபுரங்களை உடைய கோயில்கள்தான். பெரிய பெரிய கோயில்களை எல்லாம் அந்த காலத்து அரசர்கள்தான் கட்டியுள்ளார்கள். அப்படி கட்டும்போது ஒவ்வொரு கோயிலிலும் ஏதாவது ஒன்றை தனித்தன்மையுடன் கட்டியுள்ளார்கள். பல கோயில்களில் விஞ்ஞானத்திற்கும் புரியாத பல அதிசயங்கள் நிகழ்கின்றன. தமிழகத்தில் மட்டும் 38,000 திற்கும் மேலாக கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் பல கோயில்களில் பல அதிசயங்கள் உள்ளன.

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலைச் சுற்றி மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் 'பிரதக்ஷிணம்' என்பார்கள்.

**'வேதபாரதி செய்திகள்'** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **'பிரதக்ஷிணம்'** வர தீர்மானித்துள்ளோம்.

இந்த மாதம் வாயில் ரத்தம் வடியும் அதிசய கோயிலில் பிரதக்ஷிணம் வருவோம்.

### பிரதக்ஷிணம் (3)
### வாயில் ரத்தம் வடியும் அதிசய நந்தி சிலை





சிவனின் வாகனமாகக் கருதப்படுபவர் 'நந்தி தேவர்'' எல்லா சிவ ஆலயங்களிலும் சிவலிங்கத்தின் முன் நந்தி சிலை அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் சிவகங்கையில் உள்ள 'இலங்குடி' என்கின்ற சிறிய கிராமத்தில், ஊருக்கு வெளியே உள்ள சிவன் கோயிலுக்கு முன் உள்ள நந்தி ஒரு அதிசயமான நந்தி. என்ன அதிசயம் என்றால், பல நூறு ஆண்டுகளாக இந்த நந்தியின் வாயிலிருந்து வித்தியாசமான சிவப்பு நிறத்தில ஒரு திரவம் வழிந்துக்கொண்டே இருக்கிறது. இந்த திரவம் தேன்போல் வழுவழுப்பாக பிசுபிசுப்பாக சிகப்பு நிறத்தில் நறுமணத்துடன் இருக்கும். இந்த திரவத்தால் நந்திக்கு அணிவிக்கப்பட்டிருக்கும் ஆடையும் எபோதும் நனைத்தபடி உள்ளது. பக்தர்கள் இந்த திரவத்தை பிரசாதம்போல் நெற்றியில் இட்டுகொள்கிறார்கள். இந்த திரவம் எங்கிருந்து வருகிறது என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. நந்தியைப் பார்ப்பதற்கு மிகவும் எளிமையாக இருக்கிறது. இவ்வளவு அதிசயமிக்க கோயிலைப்பற்றி உலகிற்கு அவ்வளவாக தெரியவில்லை.

இந்த கிராம மக்களுக்கே இந்த திரவத்தின் பின்னணி தெரியவில்லை. ஆனால் அவர்களுக்கு இந்த நந்தியின் மீது ஒரு நம்பிக்கை. அதாவது நந்தியிலிருந்து வடியும் திரவம் நந்தியின் வாய்வரை இருந்தால் அந்த வருடம் மழையே இருக்காது. கழுத்தளவு இருந்தால் மழை கம்மியாகத்தான் இருக்கும். திரவம் நன்கு வழிந்து தரையைத் தொட்டால் அந்த வருடம் மழை அதிகமாக இருக்கும் என்பதுதான். பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்கள் ஆட்சி காலத்தில் இந்த பகுதியில் இருந்த குறு நில மன்னரால் இந்த கோயில் கட்டடப்பட்டதாக வரலாற்று ஆர்வலர் கூறுகிறார்கள். கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் இந்த நந்தியைப் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லை.

சிவகங்கை சென்றால் அனைவரும் பார்க்க வேண்டிய அதிசய நந்தி இது.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## ஸ்துதிகள்

**'ஸ்துதிகள்'** என்பது இறைவனின் பலவித தெய்வீக அம்சங்களை புகழ்ந்து பாடும் பாடல்களாகும். ஏராளமான புராணங்களிலும் மற்ற நூல்களிலும் ஸ்துதிகள் உள்ளன. ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஸ்துதிகளிலிருந்து மாதம் ஒரு ஸ்துதியை வாசகர்களுக்காக ''ஸ்துதிகள்'' என்ற இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம்.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

### 3. 'ப்ரஹ்லாத ஸ்துதி'

இரணியகசிபுவை வதம் செய்தபிறகும் பகவானின் உக்ர ரூபத்தைக் கண்ட தேவர்கள் அவரை நெருங்க பயந்து ஆகாயத்திலேயே இருந்தார்கள். லக்ஷ்மிதேவியும் பகவானுடைய அற்புத தோற்றத்தைக் கண்டு அவரை நெருங்க பயந்தாள். பகவானுடைய உக்கிரம் தணியாவிடில் உலகத்துக்கு நாசம் விளைந்துவிடும் என்று எண்ணிய பிரம்மதேவன் பிரஹ்லாதனை அழைத்து 'பிரஹ்லாதா உன் பொருட்டு உன் பக்திக்குக் கட்டுப்பட்டே பகவான் தூணிலிருந்து வெளிப்பட்டு அசுரனாகிய உன் தந்தையை வதம் செய்தார். அசுரனை வதைத்த உக்கிரம் தணியாது பயங்கரத் தோற்றத்தோடு விளங்கும் பகவானை நெருங்க எல்லோரும் பயப்படுகிறார்கள். ஆகவே நீ தான் பகவானை நெருங்கி சாந்தம் கொள்ளுமாறு வேண்டவேண்டும்' என்றார்.

ப்ரஹ்லாதன் அதை ஏற்று பகவானை நெருங்கி இரு கைகளையும் கூப்பி பகவானை துதிக்க ஆரம்பித்தான். அந்த ஸ்துதிகள்தான் 'ப்ரஹ்லாத ஸ்துதி ஸ்ரீமத் பாகவதத்திலேயே மிக அழகான ஸ்துதி இது. பகவானை பத்தியோடு ஸ்துதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களுக்கு சகலவிதமான உபதேசங்களும் இந்த ஸ்துதிகளில் உள்ளது.

*(ஸ்ரீமத் பாகவதம் ஸ்கந்தம் 7 - அத்தியாயம் 9 - ஸ்லோகங்கள் 8 முதல் 50 வரையிலும்.*

தொகுப்பு

**டி. சூரியநாராயணன்**



## வேதபாரதியின் எண்ணங்கள்

வாசகர்களுக்கு பணிவான நமஸ்காரங்கள்!

வாழ்த்துக்கள். இந்த மாதம் நாம் சிந்திக்க, சில விஷயங்கள். தனி மனித சுதந்திரம், குறிப்பாக பெண் சுதந்திரம் என்ற சொல் இன்று பெரிய அளவில் பேசப்பட்டு வருகிறது. தனி மனிதன் சுதந்திரமாக கல்வி, உழைப்பு, மனித வளம் மேன்மை செய்தல், கலை, இலக்கியம் ஆகியன எல்லாவற்றிர்க்கும் பொது. மேலும் சம அந்தஸ்து, சொத்துரிமை, பால் வேறுபாடு பார்க்காமல் முன்னேற்றம் மிகவும் அவசியமே.

தற்போது மேற்கத்திய கலாசார தாக்கத்தால் மிக இருக்கமாக தனது உடல் தோற்றம் மிக மிக கவர்ச்சியாக அணிந்து கொண்டு பொது இடங்களுக்கு தனிமனித சுதந்திரம் என்ற நினைவில் இளம் பெண்கள் செல்வது என்பது மிகவும் துரதிஷ்டம். அப்படி ஆடை அணிபவர்கள் மிக வசதியான குடும்பத்தில் நாகரீக உளவியலில் உள்ளவர்கள். தன்னை எல்லோரும் மதிப்பார்கள் என்று எண்ணி இளைஞர்களின் எண்ணங்களில் வக்ர புத்தியை தூண்டுகிறார்கள். வக்ர புத்தி உள்ள ஆண் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ள பெண்களின் அருகில் செல்ல முடியாது. ஆகையால் தன் இச்சையை வேறு நபரிடம் தன்னை மீற முடியாதவரிடம் காம புத்தியை வெளிப்படுத்துகிறான். ஆண்களோ, பெண்களோ, தங்களால் நம் சுற்றத்திற்கு கெடுதல் செய்யாமல் இருப்பது தான் இன்று பெரிய தர்மம். இன்று சிறு குழந்தைகளிடம் வன் கொடுமை என்று கேள்விப்பட்டால் மனம் நடுங்குகிறது. நம் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் உடை விஷயமாக சொல்லுதல் மிகவும் அவசியம். எல்லாம் வல்ல பரமேஸ்வரன் நம்மைச் சுற்றி உள்ளவர்கள் மனதில் நல்ல சிந்தனையை உருவாக்கி எல்லோரும் நலமுடன் வாழ ப்ரார்த்திப்போம்.

- ஆசிரியர்

**குறிப்பு :**

**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**

**- வேதபாரதி**

## மஹா பெரியவா பேசுகிறார்

கல்யாணம் பண்ணிக் குழந்தை குட்டிகள் பெறுவதே ஒரு ஜீவனுக்கு மனிதப் பிறவி கொடுக்கத்தான். பிறவி கிடைத்தால் ஜீவன் பூரணத்துவம் அடைய மார்க்கம் உண்டாகும். காமமே அதற்காகத்தான் வைத்திருக்கிறது. ஒருவனுடைய சுகத்திற்காக அல்ல. இப்படி எல்லாம் ஸ்வாமி நம்மை ஏமாற்றுகிறார். இயற்கை ஏமாற்றுகிறது.

நாக்கில் ருசி இருக்கிறது. நாக்கு மரத்துப் போய் ருசி இல்லாவிட்டால் எதையாவது ஒன்றைத் தின்று கொண்டிருப்பானே தவிர, இப்பொழுது போல உணவை மாற்றி மாற்றிச் சாப்பிடமாட்டான். ருசி இருக்கிறது; அதனால் நல்ல பதார்த்தங்களைச் சாப்பிடுவதற்கு நினைக்கிறான். நாக்கில் ருசி இருப்பது அப்படிச் சாப்பிட்டு ஆனந்தப்படுவதற்காக அல்ல. சாப்பிடுவதனாலே உடம்பு வளருகிறது. நாக்கிலே ருசி வைத்திருப்பதே உடம்மை வளர்ப்பதற்காகத்தான்.

நம் குழந்தையைக் கண்டவுடனே ஆசையோடு தூக்கிக் கொண்டு கொஞ்சுகிறோம். அது களுக்கென்று சிரிக்கிறது. அதனால் ஆனந்தம் உண்டாகிறது. அதே சமயம் பக்கத்து வீட்டுக் குழந்தையைக் கண்டால் அதிருப்தி வருகிறது. நம் குழந்தையினிடத்தில் அபிமானம் இருப்பது ஏன் என்றால், இந்தக் குழந்தையை நாம் நன்றாக வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தான். பெற்ற குழந்தையிடத்தில் நமக்குத் தனி அபிமானம் இல்லாது போனால் அந்தக் குழந்தை அப்படி அப்படியே சுற்ற வேண்டியது தான். சரியாக யாரும் வளர்க்க மாட்டார்கள். அந்தக் குழந்தை வளர அதனிடத்தில் அபிமானம் உண்டாகச் செய்திருக்கிறார் பகவான். அதுபோல இந்த உடம்பு வளர நாக்கில் ருசியை வைத்தருக்கிறார்.

காமம் எதற்கு? ஒரு சரீரம் பிறப்பதற்கு. இன்னொரு ஜீவன் ஒரு சரீரத்தை எடுப்பதற்காகக் காமத்தை வைத்திருக்கிறார். அதனால் அந்த ஜீவன் க்ஷேமத்தை அடைவதற்கு வழி உண்டாகிறது. ‘க்ஷேமத்தை அடையக் காணோமே; எல்லாம் வீணாகத்தானே போய்க்கொண்டிருக்கிறது? காம க்ரோத லோப மோக மத மாச்சரியங்களை உண்டாக்கிப் பாவத்தை



அதிகப்படுத்திக் கொள்வதற்குத்தானே ஆகிறது? பூரண நிலையை யாரும் அடையவில்லையே! இப்படி நமக்குச் சந்தேகம் வரும். அப்படிச் சந்தேகப்பட வேண்டாம்.

ஒரு மாம மரத்தில் நிறையப் பழங்கள் பழுக்கின்றன: விதைகள் உண்டாகின்றன. நன்றாகக் காய்க்கிற மாமரத்தில் முந்நூறு, நாநூறு மாங்கொட்டைகள் உண்டாகின்றன. கொட்டை உண்டாவதற்குக் காரணம் மீண்டும் மரம் உண்டாவதற்குத்தான். அத்தனை கொட்டைகளும் மரங்களாகி விடுகின்றனவா? அப்படியானால் உலகில் இடமே இராது. ஒரு கொட்டை முளைத்து நல்ல மரம் மூன்று உண்டானால் போதும்; மற்றக் கொட்டைகள் அத்தனையும் விணாக வியர்த்தமாகப் போனாலும் பரவாயில்லை.

அப்படித்தான் லட்சக் கணக்கில் நாம் இவ்வளவு பேரும் வீணாகப் போய்விட்டாலும் குற்றம் இல்லை; நம்மில் யாராவது ஒருவன் பூரணத்துவம் அடைந்தால் போதும். ஒரு மகான் ஒவ்வொரு தலைமுறையிலும் இருந்திருக்கிறார் என்ற கதை கேட்கிறோம். பூரணத்துவம் இல்லாமல் சிலர் ஏமாற்றலாம். நாம் ஏமாந்து போகலாம். அப்படிப் பத்துப் பேர் உலகைப் பூரணத்துவம் அடைந்தது போல ஏமாற்றினாலும் அவர்களில் ஒரவர் நல்லவராய் இருப்பார். கோடி கோடி சரீரம் உண்டாவதற்குப் பயன் அது ஒன்றே போதும். அந்த அன்று நமக்கு எல்லாம் சக்தி. அந்த ஒரு சக்தியைச் சிருஷ்டி பண்ணுவதற்காகத்தான் இத்தனை காமம்; இத்தனை துக்கம்; இத்தனை வியாதிகள். ‘அநேக ஜன்மங்களின் முடிவில் ஞானி என்னை அடைகிறான்’ என்ற கீதையில் பகவான் சொல்கிறார்.

- தொடரும்..

மயிலாடுதுறையில் **ஸ்ரீரமணபாரதி சைதன்ய ஜி** அவர்களின் **‘மஹான்களின் பாதையில் தர்மத்தின் குரல்’** சொற்பொழிவு மயிலாடுதுறை கைங்கர்ய சபா சார்பில் **16.01.2019 அன்று மாலை** நடைபெற உள்ளது.

-- வேதபாரதி.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## வெற்றியும் புகழும் இறைவனால் ஏற்படுபவை



சென்றவார தொடர்ச்சி ......

உடனே யக்ஷன் ஒரு புல்லை எடுத்து வாயுவின் எதிரில் வைத்து 'இதை ஊதித் தள்ளு பார்ப்போம்' என்று கூறியது. வாயு பகவான் அந்தப் புல்லின் மீது தனது முழு சக்தியையும் மிக உற்சாகமாகப் பிரயோகித்தார். இருப்பினும், அவரால் அந்தப் புல்லை சிறிதுகூட அசைக்க முடியவில்லை. தனது தோல்வியால் மனம் குலைந்த வாயு பகவான் தேவர்களிடம் சென்று, அந்த யக்ஷன் யார் என்ற விஷயத்தைத் தன்னால் கண்டுபிடிக்க இயலவில்லை என்று சொன்னார்.

முடிவாக தேவர்கள் தங்கள் அரசனான இந்திரனிடம் சென்று, 'மகவன்! நீங்கள் சென்று அந்த யக்ஷனைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் தெரிந்துகொண்டு வர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள். இந்திரனும், 'சரி, அப்படியே ஆகட்டும்' என்று கூறிவிட்டு யக்ஷனை நோக்கிப் போனார். அதற்குள் யக்ஷன் அவரது பார்வையிலிருந்து மறைந்துவிட்டார். தனது இந்திர பதவியின் மேல் அவருக்கு இருந்த அகங்காரத்தை அடியோடு ஒழிக்கத்தான் இறைவன், இந்திரனை சந்திப்பதற்குக்கூட மனமின்றி மறைந்து விட்டார். அக்னி பகவானுக்கும் வாயு பகவானுக்கும் அந்த யக்ஷனோடு சிறிது உரையாடவாவது வாய்ப்பு கிட்டியது. ஆனால், இந்திரனுக்கோ அதுகூட கிடைக்கவில்லை. இதனால் தனது அகங்காரம் முழுவதும் நீங்கப் பெற்றவராய், இந்திரன், தான் இருந்த இடத்திலேயே பிரமித்துப் போய் நின்றுவிட்டார். மற்ற தேவர்களைப் போல் இந்திரன் உடனே திரும்பிப் போகாமல், 'யார் இந்த யக்ஷன்?' என்று அதைப் பற்றித் தியானத்தில் ஆழ்ந்தார். யக்ஷனிடத்தில் அவரது மனம் ஆழ்ந்து நிலைத்திருந்ததைக் கண்டு மனம் மகிழ்ந்த இமயமலையின் புதல்வியும், மிக உயர்ந்த ரூபமுள்ள உமா, யக்ஷன் இருந்த இடத்திலேயே தோன்றினாள். அவள் என்றும் சிவபெருமானோடு



இணைந்திருப்பவள் என்று இந்திரன் அறிந்து கொண்டு, இந்த யக்ஷனைப் பற்றிய விவரத்தை அவளிடம் தாழ்மையோடு கேட்டார்.

அவள் 'அது பிரம்மம்' என்று கூறினாள். மேலும், 'அசுரர்களை வெற்றி கொண்டது இறைவன்தான். நீங்கள் எல்லாம், அவருடைய வெறும் கருவிகளாகத்தான் இருந்தீர்கள். எனவே, உண்மையில் அந்த வெற்றி இறைவனுடையதுதான். இருப்பினும், அவ்வெற்றியும், புகழும் உங்களுடையது என்று நீங்கள் நினைத்துக் கொண்டு விட்டீர்கள். உங்களுடைய இந்த அகங்காரத்தை நீக்கவே, இறைவன் யக்ஷனாக உங்கள் முன் தோன்றினார்' என்று உமாதேவி இந்திரனுக்கு எடுத்துக் கூறினாள். அக்னியும், வாயுவும் யக்ஷனோடு உரையாடியதாலும், இந்திரன் அதைப் பார்த்ததாலும், இவர்கள் மற்ற தேவர்களைக் காட்டிலும் முதன்மையானவர்கள் ஆனார்கள். உமாதேவியின் வார்த்தைகளிலிருந்து அந்த யக்ஷன் 'இறைவன்' என்று முதலில் தெரிந்துகொண்ட காரணத்தால், அம்மூவருள் இந்திரன் தலைசிறந்தவரானார்.

கேன உபநிஷத்தில் வரும் இக்கதையில் நாம் பார்த்தவாறு, தேவர்களின் வெற்றியும், புகழும் இறைவனாலேதான் ஏற்படுகின்றன எனும்போது, மானிடர்களின் வெற்றியைப் பற்றியும், புகழைப் பற்றியும் கூறுவதற்கு என்ன இருக்கிறது?

முற்றும்..

---


தங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் நடக்கும் திருமணங்கள், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் போன்ற தருணங்களில் பரிசாக வழங்கிட 'வேத பாரதி' புத்தக சந்தா செலுத்தி தங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்.

**ஆண்டு சந்தா ரூ.100/-**

*13 மாதங்கள் தங்கள் இல்லம் தேடி வரும்.*

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - டி.சூரியநாராயணன்**

'மேப்பேர் அப்பார்ட்மெண்ட்', பிளாக் 3, பிளாட் B4,

2A, எல்.ஐ.சி. காலனி பிரதான சாலை, வேளச்சேரி,

சென்னை – 600 042. Cell : 9884105302, 94434 95950

Email - vedabharathichennai@gmail.com

உ
குருவே சரணம்

# வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

**நாள்:**
**27.01.2019**
**ஞாயிற்றுகிழமை**
**காலை 7.30 மணி முதல்**
**மாலை 6.00 மணிவரை**

**இடம்:**
**ஸ்ரீ சச்சிதானந்த ஆஸ்ரமம்**
**பேபி நகர், வேளச்சேரி,**
**சென்னை - 42.**

**தகுதி :**

- 7ம் வகுப்புக்கு மேல் திருமணமாகின்ற வரை உள்ள பெண் குழந்தைகள் கலந்து கொள்ளலாம்.
- பாரம்பர்ய உடையில் வரவேண்டும்.
- உணவு, தேநீர் ஏற்பாடு உண்டு.
- தங்கள் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளருடன் கலந்து கொள்ளவும்.
- மிகச்சிறந்த பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

**முன்பதிவிற்கு : 94434 95950**

## ஸ்வாமி விவேகானந்தர்

*‘தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். லட்சியத்திலிருந்து ஆயிரம் தடவை வழுக்கி விழுந்தாலும், லட்சியத்துக்கு உழைப்பதில் பிழைகள் நேர்ந்தாலும், திரும்பத்திரும்ப அந்த லட்சியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். லட்சியத்தை அடைய ஆயிரம் தடவை முயலுங்கள்; அந்த ஆயிரம் தடவை தவறினாலும் இன்னுமொரு முறை முயலுங்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள்’ என்றவர் ஸ்வாமி விவேகானந்தர் அவருடைய பிறந்த தினம் 12.01.2019 அன்று நிகழ உள்ளது.*

## ஜாதக பரிவர்த்தனைக்கு அனுகவும் :

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |



# ஸ்ரீ மஹாமேரு மண்டலி கோட்டூர் கூட்டுப்பிரார்த்தனை

*ஸ்ரீ மஹாமேரு மண்டலி, கோட்டூர் மற்றும் வேதபாரதி சென்னை ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக பௌர்ணமி நன்னாளில், பெண்கள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணமும், குங்கும அர்ச்சனையும் செய்து வருவதால் அம்பாளின் பரிபூர்ண அனுக்ரஹமும், எல்லா நற்பயன்களும் கிடைக்கப் பெற்றார்கள். 22.12.2018 சனிக்கிழமை அன்று திரிசூலத்தில் உள்ள திரிசூலேஸ்வரர் - திரிபுரசுந்தரி ஆலய வளாகத்தில் மாலை 4.00 மணிக்கு 170 பெண்கள் கூடி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணமும் குங்கும அர்ச்சனை செய்தார்கள். ஸ்வாமி அம்பாளுக்கு நடந்த சிறப்பு அபிஷேகத்தை கண்குளிரக் கண்டு வணங்கி மகிழ்ந்தார்கள்.*



*எல்லாம் வல்ல அம்பாளின் அனுக்ரஹத்தால் அவள் அருளாலே அவன்தாள் வணங்கி எல்லோரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ பிரார்த்தனை செய்தோம். கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாத உணவு வழங்கப்பட்டது.*

*- ஆசிரியர்.*

# புதுவை வேதபாரதி நிகழ்வுகள்

15.12.2018 அன்று புதுவை மாநிலத்திற்கு விஜயம் செய்த காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களுக்கு புதுவை வேதபாரதி கிளையின் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமிகளின் ஆசியுறைகேட்டு மகிழ்ந்தார்கள். வேத பண்டிதர்கள் வேத பாராயணம் செய்தார்கள். பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் தனது ஆசிர்வாதத்தில் வேதபாரதி செயல்களை மிகவும் பாராட்டி, ஆசீர்வதித்தது நாம் செய்த பாக்யம்.



புதுவை வேதபாரதி கிளையின் சார்பாக மார்கழி நகர சங்கீர்த்தனம் தினமும் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நகரின் முக்ய வீதிகளில் பஜன் செய்து 30 நாட்களும் ஆன்மீக பவனி செய்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது. அடுத்த தலைமுறைக்கு வேதபாரதியை கொண்டு செல்லும் புனிதப் பணியில் புதுவை கிளை புதிய முத்திரை பதித்துள்ளது.








# ஸ்ரீ மஹாமேரு மண்டலி கோட்டூர் ஸ்ரீ பகவத்கீதை பாராயண யக்ஞம்

கடந்த 31.10.2018 முதல் 17.02.2019 வரை சென்னை - 85, கோட்டூர், கதவு எண்.81/1-ல் இயங்கி வரும் ஸ்ரீ மஹாமேரு மண்டலியில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை உலக நன்மைக்காக ஸ்ரீ பகவத்கீதை பாராயண யக்ஞம் நடைபெற்றுவருகிறது. பாராயணம் செய்ய விழைவோரை ஸ்ரீ மஹாமேரு மண்டலி வரவேற்கிறது.





# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000ம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளுக்காக முற்றிலும் இலவசமாக சென்னையில் இயங்கும் ஒரே புகலிடம் !

SRI MATHA TRUST 19th year of SELFLESS SERVICE



Managing Trustee
V.KRISHNAMOORTHY



Executive Trustee
P. AKASHRAM



Finance Trustee
BHAMA VENKAT

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம் ...

வேதாந்த சாஸ்திரங்களின்படி “எது நம்மை தாங்குகிறதோ அதுவே தர்மம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது”. நாம் வேதனையுறும் காலங்களில் நாம் செய்யும் தர்மமே நம்மைக் காக்கிறது. இதைத்தான் “தர்மம் தலைகாக்கும்” என்று நம் பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் **ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன்**, கடந்த 2000ம் ஆண்டு நிறுவப்பட்ட ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும், எண்ணற்ற ஏழை புற்றுநோயாளிகளைத் தாயன்புடன் தனக்குள்ளே தாங்கிக் கொண்டிருக்கும் தர்மசாலா தர்மத்தின் பரிணாமமாகவும், சாட்சியாகவும் உள்ளது என்றால் அது மிகையல்ல.

உடலில் புற்றுநோயின் வலியுடனும், உள்ளத்தில் தன் குடும்பத்தின் எதிர்காலத்தைப் பற்றிய பயத்துடனும் தர்மசாலாவில் தஞ்சம் புகும் ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவி செய்வதென்பது அந்நோயாளிகளின் உயிரை திரும்பவும் அவர்களிடமே ஒப்படைப்பதற்கு ஒப்பானது. ஏனென்றால், உங்களைப் போன்ற மனிதநேயம் மிக்க தர்மவான்கள் அளிக்கும் நன்கொடையின் உதவியால் இயங்கும் தர்மசாலா இல்லையென்றால் இந்த எளியவர்களின் உயிர்கள் அவர்களுக்கு சொந்தமில்லாமல் போகும். இந்த வரிகள் சற்று கடுமையானதாக இருந்தாலும், நமக்கு வேதனையை தந்தாலும் உண்மை நிலை இதுதான்.

இந்த அவல நிலையை போக்கிட தர்மசாலா என்னும் தர்மசக்கரம் 24 மணிநேரமும் சுழன்று கொண்டே இருக்க வேண்டியுள்ளது. வெளியூர்களிலிருந்து அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு வரும் ஏழை புற்றுநோயாளிகள் நமது தர்மசாலாவில் எவ்வித தொந்தரவும் இல்லாமல் சிகிச்சை காலம் முடியும் வரை தங்கிக்கொள்ளலாம். அவ்வாறு தர்மசாலாவில்








தங்கியிருக்கும் 250 முதல் 300 வரையிலான ஏழை புற்றுநோயாளிகளுக்கு சுகாதாரமான தங்குமிடம்; மூன்று வேளை சத்தான, சுவையான, சைவ உணவு; காபி/டீ/பால்/சத்துமாவு கஞ்சி / சுண்டல் என யாவும் அவர்கள் தங்கும் காலம் வரையில் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது.

ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் தர்மசாலாவின் இப்பயணம் புற்றுநோயே இல்லாத சமுதாயம் ஏற்படும் வரை அல்லது எளியோர் வாழ்வில் ஏழ்மை நீங்கும் வரை தொடர வேண்டிய அவசியம் உள்ளது.

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவளிக்க உதவிடுங்கள்.**

**நமக்கும் நமது சந்ததியினருக்கும் காலத்தால் அழியாத புண்ணியத்தை சேர்த்திடுங்கள்.**

“நம்மைக் காட்டிலும் உலக நன்மையே பெரிது” என்ற பொதுநலம் அனைவருக்கும் உண்டாக வேண்டும்.
ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அமுத வாக்கு.



தங்களது நன்கொடையை **Sri Matha Trust** என்ற பெயரில்
காசோலை / வங்கி பணப்பரிவர்த்தனை (NEFT) / பணம் / மனியார்டர் மூலமாகவோ செலுத்தலாம்

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவின் ஒரு பகுதியை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய உணவு / இரவு உணவு அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவின் ஒரு பகுதியை ஏற்கலாம்

| You are welcome to send your contribution to | Account Name | Bank Name | Branch |
|---|---|---|---|
| | SRI MATHA TRUST | INDIAN OVERSEAS BANK | GANDHI NAGAR, CHENNAI-20 |
| | Current A/c No. :163502000001090 | | IFSC Code : IOBA0001635 |

You may also deposit your donation in any IOB Branch for crediting into our account.
Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
Donate liberally and reduce your income tax liability.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or e-mail the donation details to enable us send our receipt.

Sri Matha Trust, Rajasthani Dharmasala, Old Cancer Institute Premises, Gandhi Nagar Canal Bank Road, Adyar, Chennai - 600 020. Tel: 044-2442 0727
Mobile: 94440 01065, 93810 20727, 90032 47857 Email: vkrishnamoorthy.smt@gmail.com
Regd. Office: "Natha Kamalam" 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 59.

“Helping hands” are much holier than “praying lips”... thus said an adorable Saint

“One need not be rich or wait to become rich to give his mite”... a Legendary saying

ஓம் நம:சிவாய



# விவாஹ சுபமுகூர்த்த வாழ்த்து

திரு.K.ஸ்ரீதரன் - ஸ்ரீமதி.மீனாட்சி அவர்களின்
புதல்வனுக்கும்
திரு.M.V.சுப்ரமணியம் - ஸ்ரீமதி.அபையாம்பாள் அவர்களின்
புதல்விக்கும்
நடைபெறவுள்ள திருமணத்திற்கு அன்பான வாழ்த்துக்கள்.

மணமக்கள் :
செல்வன்.S.விக்னேஷ்
(எ) முத்துகிருஷ்ணன்
செல்வி.S.அக்ஷயா



மணநாள் :
30.01.2019,
புதன்கிழமை

மணஇடம் :
**பவித்ரா பார்க்**
200 அடி ரோடு, பல்லாவரம் - துரைப்பாக்கம் பைபாஸ் ரோடு,
கோவிலம்பாக்கம், சென்னை - 600 129, (ஈச்சங்காடு சிக்னல்)

கலையாத கல்வியும் குறையாத வயதும்
ஓர் கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்
ஒரு துன்பமிலாத வாழ்வும்
பெற்று மணமக்கள் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.


திருமண விழாவிற்கு
வேதபாரதியின் மனமார்ந்த
வாழ்த்துக்கள்

அன்புடன் வாழ்த்தும்
**வேதபாரதி**
வேளச்சேரி, சென்னை - 42.



# ஸந்தியா வந்தன போட்டி - 2018

25.12.2018 அன்று குரோம்பேட்டை, நெமிலிச்சேரி ஸ்ரீ வேத வ்யாஸ் குருகுல பாடசாலையில் வேதபாரதி நடத்திய அந்தணச் சிறுவர்களுக்கான 'ஸந்த்யா வந்தனப் போட்டி' வெகு சிறப்பாக நடைபெற்றது. 78க்கும் மேற்பட்ட அந்தண சிறுவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்து கொண்டார்கள். எல்லா ஸாகை குழந்தைகளும் , எல்லா ஸம்ப்ரதாயங்களையும் சார்ந்த குழந்தைகளையும் பங்கு பெற அழைத்திருந்தோம். யஜுர் வேத ஸம்ப்ரதாய குழந்தைகள் வெகுவாக கலந்து கொண்டார்கள். பாடசாலை ஸ்ரீமான் சிவா சாஸ்திரிகள் எல்லா முன்னேற் -பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தார்கள்.



வேதபாரதி அன்பர்கள் நல்ல ஏற்பாடுகள் செய்து குழந்தைகளை அழைத்து வருதல், ஸாகை பிரித்தல், பரீட்சை நடத்துதல் ஆகியவைகளை நேர்த்தியாக செய்திருந்தார்கள். முதலில் 9.30 மணி முதல் 10.00 மணி வரை எழுத்து தேர்வு நடைபெற்றது. 10.00 மணி முதல் 11.00 மணி வரை வாய்மொழித் தேர்வு, செய்முறைத் தேர்வு நடைபெற்றது. ஸ்ரீமான் சந்திரசேகர் ஜி அவர்கள் குழந்தைகளுக்கு வழிகாட்டி நல்ல கருத்துக்களை குழந்தைகள் ஆர்வத்துடன் கேட்டு அதன்படி நடப்பதாக சொன்னார்கள். ஸ்ரீமான் சிவா சாஸ்திரிகள் நம் பாரம்பரியத்தின், முக்கிய அங்கமான 'சந்தியா வந்தனத்தின்' அவசியத்தை எடுத்துக் கூறினார்கள். பெற்றோர்களுக்கும் பாடசாலை குழந்தைகளுக்கும் ஸ்ரீ ரமண பாரதி சைதன்ய ஜி அவர்கள் வழி காட்டினார்கள். மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் மற்றும் ஸ்ரீமான் சிவா சாஸ்திரிகள் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள். எல்லோருக்கும் காலை சிற்றுண்டியும் காலை மதியம் சிறப்பான உணவு பாடசாலை மூலம் வழங்கப்பட்டது. இதற்காக சிவா பாடசாலை குழுமத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 29

எப்படியோ தோல்வியை சமாளிக்கும் குழந்தைகள் கூட 'பயம்' என்பதை கண்டு பயப்படுவதை நாம் காண்கிறோம்.

'அதெல்லாம் என் பிள்ளை / பெண் பயப்படுவதேயில்லை. 'செம கெத்து' அவர்கள் ஒரு 'கில்லி' ஏதாவதுன்னா 'மெர்சலாக' வந்து நிற்பார்கள் என்று பெற்றோர் கூறும் பொழுது 'பேசாமல் அந்த சினிமாக்களுக்கு இவர்களையே பி.ஆர்.ஓ எனப்படும் பொது ஜன தொடர்பாளராக ஆக்கிவிடலாம்' என்று தான் எனக்கு தோன்றும்.

இதற்கு எதிர்மாறாக, 'ஒரேடியாக பயப்படறாள், அதான் மற்ற குழந்தைகள் இவளை சீண்டிக் கொண்டேயிருக்கிறார்கள்' என்று வருத்தப்படும் பெற்றோர்கள் ஏராளம்.

முதலில் பயம் என்றால் என்ன? அது ஒரு சிறுவன் / சிறுமியை தாக்கினால் என்ன ஏற்படுகிறது? அதை எப்படி போக்குவது? எதை, யாரை கண்டு பயம் எற்படுகிறது? அதை எப்படி போக்குவது? பய உணர்விலிருந்து விடுபட வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?

மேற்கூறிய அத்தனை கேள்விகளுக்கும் பதில் தெரிந்தால் தான் இந்த இளவயது சிறுவர், சிறுமியரை கையாள முடியும்.

கோபம், துக்கம், மகிழ்ச்சி என்பது போல ஒரு மன உணர்வு தான் 'பயம்' என்பது 'கோபம்' வந்தால் பல்லைகடிப்பதும், துக்கம் வந்தால் அழுவதும், மகிழ்ச்சி ஏற்பட்டால் சிரிப்பதும் ஒருவித வெளிப்பாடு. அது போன்ற பயம் வந்தால் அழுவதும், நடுங்குவதும், ஓடி ஒளிவதும் ஒருவித வெளிப்பாடு.

பொதுவாக சிறுவர் / சிறுமியர்கள் 10 வயது முதலே பலவித உணர்வுகளின் வெளிப்பாட்டினை அளித்துக் கொண்டேயிருப்பார்கள். அது 'என்ன உணர்வு' என்று



அவர்களுக்கே புரியாது என்பதால் அதை ஒரளவு புரிந்து கொண்டு கேள்விகள் கேட்டு, அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இதைத் திறம்பட செய்வதற்கு பெற்றோர்களிடம் முதலில் புரிதல் வேண்டும். தன் வயதிலிருந்து, தன் இடத்திலிருந்து இதைப் பார்க்காமல் சற்றே யோசித்து, மென்மையான அணுகுமுறையும், தான் பெற்ற குழந்தைகள் கூறுவதையும் நன்கு கேட்டு உள்வாங்கி, ஏற்ற அறிவுரை கூற வேண்டும்.

'பயம்' என்பது ஒரு உணர்வு. இது மிக எதிர்மறை சிந்தனைகளால் ஏற்படும் குழப்பம், அதனால் கூடும் தாக்கம் பயம் என்பது மன உளைச்சலை அளித்து, மன அழுத்தத்தை கூட்டுகிறது. உ.ம். நாளை 'பரீட்சை' என்றால் இன்று பயப்படுவது, காரணம் மிகமுழுமையான கவனத்துடன் படிக்காதது. யாரோ, ஏதோ புரளியை கிளப்ப தோன்றும் 'பரீட்சை பயம்' முதல் யாரோ ஒரு பையன் பின் தொடர்வது, என்னிடம் டீச்சர் அதீத கடுமையாக இருப்பது போன்ற பல விஷயங்கள் இதில் அடக்கம்.

பயம் என்றால் கரிய, அடர்ந்த இருளை ஒரு சிறுவன் / சிறுமியிடம் போக்க வேண்டுமென்றால் 'அன்பு' எனும் தீபத்தை அந்த இடத்தில் பெற்றோர்கள், தாத்தா - பாட்டிகள், ஆசிரியர்கள் என்று அனைவரும் ஏற்ற வேண்டும். அப்பொழுது பயம் விலகி, மிகுந்த மன நிம்மதி குழந்தைகளுக்கு கிடைக்கும்.

மனதில் எதிர்மறை எண்ணம் தோன்றுவதற்கு பயம் ஒரு முக்கிய காரணம். பயத்தின் கொடுரத்தினால் சக்தியையும், தகுதியையும் இழந்தவர்கள் பலர் உண்டு.

நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

(குறள் : 511,தெரிந்து விளையாடல்)

ஒரு பணியின் நன்மை தீமைகளைப் பற்றி அறிய வேண்டும். அப்பணியை நன்கு செய்த, அனுபவம் கொண்டவர் மூலம் அதை செய்விக்க வேண்டும் என்கிறார் வள்ளுவப் பெருமான்.

பயத்தை நீக்க, இது ஒரு முக்கியமான வழி.

- தொடரும்....

**- காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**

## சிந்திக்க சில நொடிகள்

*சகித்துக் கொள்ள இயலாத நவீன நாகரீக தாக்கங்கள் :*

1. தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டே சாப்பிடுவது (அ) தண்ணீர் குடிப்பது.
2. காலையில் குளிக்காமல் இருப்பது.
3. வெட்கம் கெட்ட ரீதியில் பேசுவது, உடை உடுத்துவது.
4. எந்தக் காரியத்தைச் செய்யும் போதும் 'என்ன பெரியதாக' என்று அலட்சியமாக நினைப்பது.
5. எப்பொழுதும் பணம், சினிமா, அரசியல் பற்றியே பேசுவது.
6. வீட்டில் பெரியவர்களை உதாசீனப் படுத்துவது, வீட்டில் பெரியவர்களை வைத்துக் கொள்ளாமல் இருப்பது.
7. நமது நடவடிக்கைகள், செயல்களுக்கு எந்தவொரு திட்டமும் ஒழுங்கும் இல்லாதிருப்பது.
8. நடந்து கொண்டே சாப்பிடுவது மற்றும் கீழே சிந்துவது.
9. அனாவசியமாக செலவு செய்வது.
10. இயற்கைக்கு விரோதமாகப் பகலில் தூங்குவதும், இரவு முழுவதும் முழித்தப்படி வேலை செய்வதும் மிகப்பெரிய சாதனை என நினைப்பது.
11. என் இஷ்டம் , நான் எப்படி இருந்தால் உனக்கு என்ன? நான் இருப்பதே இப்படித்தான் என்ற (பொறாமை) கர்வத்துடன் இருப்பது.
12. ஆரோக்கியத்தை கெடுத்துக் கொண்டு பணம் சம்பாதிப்பது.
13. தியாகம், பொறுமையைக் கேலி செய்வது, தடையில்லாத, அளவில்லாத இன்ப நுகர்ச்சியும், தான் தோன்றித்தனமாக வாழ்வதும்தான் சிறந்த பண்பாடு என்று நினைப்பது.
14. தவறுகளை, இயற்கைக்கு எதிரான பண்புச் சிதைவுகளை தனிநபர் சுதந்திரம் என்ற பெயரில் நிதிமன்றம் ஒப்புதல் கொடுப்பது. (உ.ம்.) ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணம், விவாகரத்து, திருமணம் செய்து கொள்ளாமல் குடும்பம் நடத்துவது.
15. அதிகாரத்தில் இருப்பவர்கள் அனைத்தும் தெரிந்தவர்கள் என்று பேசும் துதிபாடிக் கலாச்சாரம் எங்கும் பரவியுள்ளது.

...தொடரும்.

**- RBVS மணியன்**



## 10-ம் ஆண்டு ஹிந்து ஆன்மீக கண்காட்சி

10-வது ஹிந்து ஆன்மீக கண்காட்சி, வேளச்சேரி, குருநானக் கல்லூரியில் நடைபெற, சிறப்பாக கொண்டாடிட வேளச்சேரி பகுதியில் உள்ள ஆலயங்களின் பொறுப்பாளர்களும், வேளச்சேரி வாழ் மதிப்பிற்குரிய பொது நல நோக்கமுள்ள அமைப்பு அன்பர்களுக்கும் முறையாக அழைப்பிதழ் அனுப்பப்பட்டு 16.12.2018, ஞாயிற்றுக்கிழமை, மாலை 4.00 மணிக்கு, வேளச்சேரி ஸ்ரீ தண்டீஸ்வரர் ஸ்வாமி ஆலயத்தில் ஒன்று கூடினோம். சுமார் 70க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

சைவத்திரு குமாரராஜா அவர்கள் எல்லோரையும் வரவேற்றார். ஆன்மீக கண்காட்சி பொறுப்பாளர்கள் ஸ்ரீ சத்ய நாராயணன், ஸ்ரீமதி.ஜெயந்தி, ஸ்ரீமதி.சாந்தி சர்வோத்மர், ஸ்ரீ அருள் நந்தி சிவம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். ஸ்ரீ. வி. பசுபதி அவர்கள் தேவார இசையுடன் விழா துவங்கியது. கண்காட்சி பொறுப்பாளர்கள், கண்காட்சியின் நோக்கம், தற்போதைய தேவை, நமது பங்களிப்பு குறித்தும், கண்காட்சியில் நடைபெறும் விழாக்கள் குறித்தும் கண்காட்சிக்கு முன் நடைபெறும் ரத ஊர்வலம், 25000 பேர் பங்கு கொள்ளும் தேசபக்தி நிகழ்ச்சி நாட்டிய நிகழ்ச்சி பற்றிய குறிப்புகள் கொடுத்தார்கள்.

29.01.2019ம் தேதி முதல் பிப்ரவரி 4-ம் தேதி முடிய நடைபெறும் பிரம்மாண்ட விழாவில், வேளச்சேரியில் உள்ள கோவில்களின் குழுக்களும், பொது அமைப்புகளும் பெருந்திரளாக பங்கு பெறுவது என்று தீர்மானிக்கப்பட்டது. 29.01.2019 அன்று நடைபெறும் துவக்க விழா நிகழ்ச்சி பூஜையில் 1000க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பூஜையில் பங்கு பெறுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

01.02.2019 அன்று நடைபெற உள்ள ஸ்ரீ மீனாட்சி கல்யாண வைபவத்தில் ஸ்ரீ தண்டீஸ்வரர் ஸ்வாமி கோவிலிலிருந்து சீர்வரிசை கொண்டு செல்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**அன்புடன் : வேதபாரதி**

# தர்மத்தின் குரல்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.12. சூழ்நிலையா, மரபணுவா?

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அப்படியானால், இரட்ரையர்களிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கென்ன காரணம்? அவர்கள் இருவரும் ஒரே சமயத்தில் கருக்கொண்டிருந்தாலும், ஒருவர் நல்ல ஆரோக்கியமுடையவராகவும் மற்றவர் அவ்வாறு இல்லாதவராகவும் இருக்கலாம். ஒருவர் அறிவுக்கூர்மையுடையவராகவும் மற்றவர் அவ்வாறில்லாதவராகவும் இருக்கலாம். ஒருவர் ஆணாகவும் மற்றவர் பெண்ணாகவும் இருக்கலாம்.*

'தாது, நேரத்திற்கு நேரம் மாற்றம் அடைந்து கொண்டேயிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இரட்டைக்குழந்தைகள் விஷயத்தில் அவை, தாதுவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து தோன்றுகின்றன; அப்பகுதிகள் வெவ்வேறான தன்மைகளைக் கொண்டவை. இதுவே, இரட்டையர்களுக்கிடையேயான வேறுபாடுகளுக்குக் காரணம்'.

*அவ்வாறெனில், தாதுவின் ஒரே பகுதியிலிருந்து தோன்றும் ஸயாம் இரட்டையர்களிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கென்ன சொல்வது? (ஸயாம் இரட்டையர்கள் என்பவர்கள் உடலில் ஏதாவதொரு பகதியில் இணைக்கப்பட்டவர்கள்) அறுபதாண்டுகளுக்கு முன்னர், பெங்களூரில் இரண்டு ஸயாம் இரட்டையர்கள் இருந்தனர். அவர்களின் உடல் தோற்றம் பற்றிய தகவல் நம்மிடம் இல்லை. ஆனால், இத்தகைய இரட்டைச் சகோதரிகள் அமெரிக்காவின் மஸ்ஸாகஸெட்ஸ் மாநிலத்தில் இறந்தார்கள். அவர்களின் பெயர்கள் மேரி, மார்கரெட் என்பன. அவர்கள் மருத்துவர்களின் தொடர்ச்சியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள்*



*ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சர்க்கஸ்களில் வித்தைகள் காட்டி வந்தனர். அவர்கள் 54 நீண்ட ஆண்டுகள் வாழ்ந்தனர். அவர்கள் ஒன்றாகவே பிறந்து, ஒன்றாகவே இறந்தனர். ஆனால் மார்க்ரெட் குடல் புற்று நோயால் பாதிக்கப்படு, 1967ம் ஆண்டு ஜனவரியில் இறந்தார்; அடுத்த இரண்டு மணிநேரங்களில் மேரியும் இறந்தார். அவர்கள் வளர்ந்த, வாழ்ந்த சூழ்நிலை ஒன்றாகவே இருந்தது. அவர்கள் ஒரே கருப்பையில் ஒரே நேரத்தில் வாழ்ந்தார்கள். ஒரே உணவை உட்கொண்டார்கள். ஒரே இரத்தத்தைப் பெற்றிருந்தார்கள்; இருவர் கண்டதும் கேட்டதும் ஒன்றே; இருவரும் ஒரே சமயத்தில் ஒரே வெப்பத்யையோ, குளிர்ச்சியையோ அனுபவித்தார்கள். இவ்வாறாக, அவர்களின் சூழ்நிலையில் எவ்விதமான வேறுபாடும் இல்லவே இல்லை; அவர்கள் ஒரே தாதுவிலிருந்து தோன்றியவர்கள். இத்துனை ஒற்றுமைகள் இருந்தும் அவர்களின் இயல்புகள் மிகவும் மாறுபட்டு இருந்தன. மார்கரெட்டுக்குச் செல்வம் சேர்க்கும் மனோபாவம் இருந்தது; ஆனால் மேரியோ செலவாளியாக இருந்தார். மார்கரெட் குடற்புற்று நோயில் வலியை அனுபவித்தார். ஆனால் மேரிக்கு அது இல்லை. இந்த வேறுபாடுகள் தோன்றக்காரணமென்ன?*

ஆண் தாதுவின் ஒரே பகுதியில் கூட இதன் பல இடங்கிள்ல இரசாயன உயிரியலில் வேற்றுமைகள் இருக்கும். ஸயாம் இரட்டையர்களிடையே காணப்பட்ட வேற்றுமைகளுக்கு அதுவே காரணம். நவீன மரபணுவியல், பரம்பரையாகவரும் மரபணுவே இதற்குக் காரணம் என்கிறது.

*இந்த வேற்றுமைகளுக்கு காரணம் சுற்றுப்புறம் என்று முதலில் சொன்னாய் பிறகு ஆண்தாது, ஆண்தாதுவின் வேறுபட்ட பகுதிகள், அப்பகுதியைச் சேர்ந்த பல இடங்கள் என்றெல்லாம் சொல்கிறாய். எப்படி என்ற கேள்விகளுக்கு வேண்டுமானால் இந்த பதில்கள் ஒரு வேளை சரியாக இருக்கலாம். ஆனால், இப்பொழுது நம் கேள்வி எப்படி என்பதல்ல, ஏன் என்பதுதான் இது பற்றி விஞ்ஞானம் என்ன சொல்லுகிறது?.*

தொடரும்...

உ

**கல்யாண் நகர் அசோசியேஷன் - மந்தைவெளி**

மற்றும்

**வேதபாரதி**

இணைந்து நடத்தும்

## 'யுவஸ்ரீ' வாழ்வியல் பயிலரங்கம்

**நாள் : 26.01.2019, சனிக்கிழமை**

**மாலை 3.00 மணிமுதல் 6.00 மணிவரை**

**இடம்: கல்யாண் நகர் அசோசியேஷன் ஹால், மந்தைவெளி**

1. 13 வயது முதல் திருமணமாகின்ற வயது வரை உள்ள பெண் குழந்தைகளுக்கு வாழ்வியல் பயிலரங்கம்.
2. தன்னம்பிக்கை, மன ஒருமைப்பாடு, விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கம்.
3. பெற்றோர்களும் கலந்து கொள்ளலாம். 5 நிமிடம் முன்னதாக அரங்கத்தில் இருக்க வேண்டும்.
4. நிகழ்ச்சியின் போது அலைபேசியை அமைதியில் வைத்திட வேண்டும்
5. அரங்கில் கீழ்க்கண்ட தலைப்புகளில் பேச விருப்பமுள்ளவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

   தலைப்பு: என் குடும்ப பெருமை, நான் வணங்கும் மஹான், என் எதிர்கால கனவும்-வாய்ப்புகளும், நட்புக்கும் உறவுக்கும் ஆன புரிதல்
6. மாலை தேநீர், சிற்றுண்டி ஏற்பாடு உண்டு.
7. முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை.
8. பாரம்பரிய உடையில் வருவதை வரவேற்கிறோம்.
9. மேலும் தொடர்புக்கு : **044 2495 2997 / 94454 36208**

சிறப்பு அழைப்பாளர்:

நம்பிக்கை சிகரம் திருமதி. **ரேவதி சங்கரன்** அவர்கள்

**பரிசுகள், ஊக்கப்பரிசுகள், சிறப்புப் பரிசுகள் உண்டு.**

*பங்கு பெற அன்புடன் அழைக்கிறோம்.*

## சிறப்பு சொற்பொழிவு

*வழங்குபவர் :* **ஸ்ரீ ரமண பாரதி சைதன்ய ஸ்ரீ**

*தலைப்பு :* **மஹான்களின் பாதையில் தர்மத்தின் குரல்**

*இடம் :* **சத்சங்கம்,**

சத்சங்கம் ரோடு, மடிப்பாக்கம்

*நாள் :* **15, 16, 17 பிப்ரவரி 2019**

வெள்ளி, சனி, ஞாயிறு

*நேரம் :* **மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை**

தினமும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் நடைபெறும்.

**அனைவரும் வருக! அனுமதி இலவசம்!**



## வேதபாரதி உறுப்பினர்கள் கூட்டம்

*16.12.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் 12.00 மணி வரை மேற்கு மாம்பலத்தில் ஸ்ரீ கண்ணன் அவர்கள் இல்லத்தில் வேதபாரதி உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.*

1. *25.12.2018 அன்று ஸந்தியா வந்தன போட்டி*
2. *30.12.2018 - புதுவை - தர்மபுரி நிகர்ச்சிகள் சிறப்பாக நடத்துவது.*
3. *06.01.2019 - 'திருப்பாவை' நிகழ்ச்சிக்கு ஆயத்தப்பணிகள் செய்வது என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.*

## 10-ம் ஆண்டு ஹிந்து ஆன்மீக கண்காட்சி

**சென்னை வேளச்சேரி குருநானக் கல்லூரி வளாகம்**

**நாள் : 29.01.2019 முதல் 04.02.2019 வரை**

- *250க்கும் மேற்பட் அரங்குகள், பல ஆயிரம் ஸனாதன தர்ம சாரதிகள் பங்கு கொள்ளும் திருவிழா.*
- *ஸ்ரீ மீனாட்சி கல்யாணம்*
- *ஸ்ரீ சீனிவாஸ பெருமாள் கல்யாணம்.*
- *குழந்தைகளுக்கான போட்டிகள், கருத்தரங்குகள், மனித ஸமுகத்திற்கு தேவையான ஸம்ஸ்காரங்கள் குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள், அரிதான கலைப்படைப்புகள் இடம் பெற உள்ளன.*

**அனைவரும் வருக!**

**அன்புடன் : வேதபாரதி**

*06.01.2019 ஞாயிறு அன்று திருப்பாவை திருவெம்பாவை போட்டி நிகழ்ச்சி தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளி வளாகத்தில் காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை நடைபெற உள்ளது.*

**அனைவரும் வருக! வருக!**

**அன்புடன் : வேதபாரதி**

உ

# மாடம்பாக்கம் ஜனகல்யாண்

சென்னை - 600 126.

## 25ம் ஆண்டு வெள்ளிவிழா

## ஷஷ்டி உபநயன பிரம்மோபதேச கைங்கர்ய வைபவம்

**இடம் : ஸ்ரீ சங்கரவித்யாலயா பள்ளி,**
சேலையூர், கிழக்கு தாம்பரம், சென்னை - 59.

**16.02.2019**

மாலை 6.00 மணி முதல் 7.30 மணிவரை **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின்** விஜய அருளுரை வழங்க உள்ளார்கள்.

**17.02.2019**

**காலை 5.00 மணி முதல்**
வைதீக வைபவம், மங்கள இசையுடன்
பாதுகை அபிஷேகம் உதக சாந்தி, வேத பாராயணம்

**காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை**
உபநயனம், பிரம்மோபதேசம், அக்ஷதை, ஆசீர்வாதம்

**10.00 மணிக்கு**
அறுசுவை அன்னப்பிரசாதம்.

**அனைவரும் வருக! அருளாசி பெறுக!!**

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - டி.சூரியநாராயணன்**
'மேப்பேர் அப்பார்ட்மென்ட்', பிளாக் 3, பிளாட் B4,
2A, எல்.ஐ.சி. காலனி பிரதான சாலை, வேளச்சேரி,
சென்னை – 600 042. Cell : 9884105302, 94434 95950
Email - vedabharathichennai@gmail.com



# ஹிந்து குடும்ப சங்கமம் - 2019

**ராஷ்ட்ரிய சேவிகா சமிதி தமிழ்நாடு மற்றும் விவேகபாரதி சென்னை இணைந்து நடத்தும் ஹிந்து குடும்ப சங்கமம்.**

| நாள்: | இடம்: |
|---|---|
| 10.02.2019<br>ஞாயிற்றுகிழமை<br>காலை 9.00 மணி முதல்<br>8.00 மணி வரை | மஹரிஷி வித்யாமந்தீர்,<br>மஹரிஷி கார்டன்ஸ்<br>உள்ளே பழைய கல்வி கார்டன்ஸ்<br>28, குருசாமி சாலை,<br>சேத்பட், சென்னை - 600 020. |

- குடும்ப உறவுகளின் மேம்மையை உணர்த்திட
- தம்பதியர் இடையே புரிதலை மேம்படுத்திட
- சமுதாயத்தை உயர்த்த குடும்பங்களின் பங்களிப்பை புரிய வைக்க
- 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு தனி நிகழ்ச்சிகள் உண்டு.
- மதிய உணவு, மாலை தேநீர் உண்டு.

முன்பதிவு செய்ய : **99623 67975 / 99529 59072**

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் :
**தி. சந்திரமௌலி, செல் : 98849 45825**



**அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.**

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

## மணிமங்கலம், தாம்பரம், சென்னை

CODE 1405

பாடப்பிரிவுகள்:

இளநிலை (பி.இ.)

MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE

### கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்

**வளாக கட்டமைப்பு:** கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.

**பேராசிரியர்கள்:** அனைத்து பேராசிரியர்களும் உயர்கல்வித்தகுதியும் மிகுந்த அனுபவமும் பெற்றவர்கள்.

**வேலை வாய்ப்புக்கான சிறப்புப்பயிற்சி:** இன்போசிஸ், ரெட்ஹாட், லினக்ஸ், என்.ஐ. லேப்வியூ, ஐ.சி.டி. அகாடமி போன்ற பல முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம். 300 அதிநவீன இணையதள கணிணி வசதியுடன், ஆன்லைன் சென்டர்.

2017-18 வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 90 விழுக்காடு

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி:** இக்கல்லூரயில் பல துறைகள் அண்ணா பல்கலைக்கழகத்தால் ஆராய்ச்சி படிப்பிற்கு அங்கீகரிக்கப்பட்டவை. இஸ்ரோ நிறுவனத்தின் மூலம் ஆராய்ச்சி திட்டத்திற்கு நிதிஉதவி.





**நூலகம்:** கல்லூரியின் நூலகத்தில், முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள், நூலகத்தில் 50க்கும் மேற்பட்ட அதிவேக இணையதள வசதியுடன் கூடிய கணிணிகள் மற்றும் நகல்படி எடுக்கும் வசதிகள்.

**விடுதி:** மாணவர் மற்றும் மாணவிகளுக்கு உயர்தர வசதியுடன் கூடிய தனித்தனி விடுதிகள்

**உணவகம்:** மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உணவருந்தும் வகையில் சுகாதாரமாக பிரம்மாண்ட உணவுக் கூடம்.

**போக்குவரத்து:** நகரின் அனைத்து பகுதிகளில் இருந்து 40-க்கும் மேற்பட்ட கல்லூரிப் பேருந்துகள் இயக்கம்.

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**



டாக்டர். **வி.பி.இராமமூர்த்தி.** பிஎச்.டி.
நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்
மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்


# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம்,
சென்னை - 601 301, தமிழ்நாடு

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**
**044 - 71 700 801 / 803 / 2436 3321.**

**www.dce.edu.in**

G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **23.01.2019 புதன்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**06.01.2019, ஞாயிற்றுக்கிழமை**

**திரிசூலம் (மீனம்பாக்கம் விமான நிலையம் எதிரில்)**

**அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை திரிசூலநாதர் திருக்கோயில்**



ஆரோக்கியமான வாழ்க்கைக்கு
**பசுமை**
ஆர்கானிக் & நேச்சுரல்ஸ்

நெ. 5B/4, 7வது குறுக்கு தெரு, தண்டீஸ்வரம், வேளச்சேரி,
சென்னை - 600 042. (தினத்தந்தி அலுவலகம் அருகில்)
**044-42325018**

**இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள்**

**செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கிடைக்கும்**

**நாட்டு பசும்பால், பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், தேன் இரசாயணமற்ற அழகு சாதன பொருட்கள் மூலிகை பொடிகள், மூலிகை டீ மற்றும் எண்ணற்ற இயற்கை பொருட்கள் இங்கு கிடைக்கும்.**

# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

## அன்றாடம் அக்குபிரஷர்

### அக்குபிரஷர் வரலாறு

நமது உடம்பில் நரம்புகள் எல்லா உறுப்புகளிலும் பரவியுள்ளன. இந்த நரம்புகளின் கடைசிப் பகுதியை அக்கு என்பார்கள். இந்த அக்கு, புள்ளிகளில் கொடுக்கப்படுகிற அழுத்தத்தை அக்குபிரஷர் எனவும், அக்குபுள்ளிகளில் ஊசிகளைக் கொண்டு குத்தினால் அக்குபஞ்சர் எனவும் கூறப்படுகிறது.

உடலின் தசைகளை இயக்குவது நரம்புகளின் வேலையாகும். இதை கருத்தில் கொண்டு நமது முன்னோர்கள், நம் உடலின் பாகங்களில் சில மர்மப் புள்ளிகள் உள்ளன என்று கண்டுபிடித்திருந்தார்கள். இந்த புள்ளிகளை நம் நாட்டில் வர்மப் புள்ளிகள் எனவும், சீனர்கள் அக்குபஞ்சர் புள்ளிகள் எனவும் பெயரிட்டனர்.

அக்குபஞ்சர் புள்ளிகளில் விரலினால் அழுத்தி அல்லது ஊசியால் குத்தி உடலிலுள்ள நரம்புகளையும், தசைகளையும் மறத்துப் போகச் செய்யவும் அவைகளின் செயல் திறனை ஊக்குவிக்கவும் முடியும் என்றும் கண்டுபிடித்தார்கள். இந்த முறைகளின் மூலம் நோய்களை குணமாக்கும் வைத்திய முறையே அக்குபஞ்சர் வைத்திய முறை என்றழைக்கப்படுகிறது.

இன்றைய பிரபல குங்பூ, கராத்தே, ஜுடோ என்று படிப்படியாக வளரும் சண்டைப் பயிற்சிகள், அக்குபஞ்சர் என்று மருத்துவ முறையிலிருந்து தோன்றியதே ஆகும்.

டாக்டர் S.K.**மீனா வாசுகி**
Acupuncture Specialist, Yoga & Varma Healer